பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 01 சனிக்கிழமை (17-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 256

# நிவாரண நிறுத்தத்தை கண்டித்து செயலகம் முன்பாக நேற்று மறியல்

யாழ்ப்பாணம், ஆக. 17

உலர் உணவு நிவாரண நிறுத்தத்தைக் கண்டித்து நேற்றுக் காலை 7 மணி முதல் யாழ். செயலகம் முன்பாக மறியற் போர் நடந்தது.

உலர் உணவு நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று கோரி குடாநாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து பல நூற்றுக் கணக்கான மக்கள் காலை 7 மணி முதல் செயலகம் முன் கூடினர்.

தகிக்கும் வெயிலிலும் அவர்கள் அங்கிங்கு அசையாமல் அமர்ந்திருந்தனர். செயலகத்துக்குள் எவரும் செல்லமுடியாதவாறு மறியற் போர் நடந்ததால், செயலக ஊழியர்கள் திரும்பிச் சென்றனர்.

நண்பகல் அளவில் அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. அதை அடுத்து மறியற் போரில் ஈடுபட்டோர் கலைந்து சென்றனர்.

மகஜரில் உள்ள முக்கிய கோரிக்கைகள் வருமாறு:-

★ சமுக நிலை திரும்பும் வரை வாராந்தம் உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

# அவசரமாக மருந்து மடுவுக்கு அனுப்புக!

## உதவி வழங்கும் நாடுகளுக்கு ஐ. நா. தூதரகம் கோரிக்கை

கொழும்பு, ஆகஸ்ட் 17

**மன்னார் மாவட்டத்தில் மடு மற்றும் இடங்களில் இயங்கும் அகதி முகாம்களில் உள்ளவர்கள் மருந்து வசதியின்றி அவச்சாவை எதிர்நோக்கியிருக்கின்றார்கள். அவர்களைக் காப்பாற்ற அவசரமாக மருந்து வகைகளை அனுப்பி உதவுங்கள்!**

— இவ்வாறு ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகள் தூதரகத் தலைமையகம் உதவி வழங்கும் நாடுகளுக்கு அவசரச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது.

பிரெஞ்சு வைத்தியக் குழு (எம். எஸ். எவ்.) மற்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஆகியவையே இதுவரை இந்த அகதிகளுக்கு மருத்துவ வசதிகளை வழங்கி வந்தன.

ஆனால் அவை தேவையை நிறைவேற்றக் கூடியளவு மருத்துவ வசதிகளை வழங்காததாலும், மருந்து இன்றியும் முகாம்களில் அவச்சாவு ஏற்படும் அபாயம் தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முகாம்களில் வயிற்றோட்டம், மலேரியா, விசர்நாய்க்கடி போன்றவற்றால் இதுவரை ஐம்பதுக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

மடு அகதி முகாமில் மட்டும் 50 ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகள் தங்கியுள்ளனர்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பிடிபட்ட சிப்பாயை விடுவிக்க நிபந்தனை!

கொழும்பு, ஆக. 17

ஆனையிறவு யுத்தத்தின் போது தங்களிடம் பிடிபட்ட ஸ்ரீலங்கா சிப்பாய் கே. எல். உபாலியை விடுவிப்பதாயின் அதற்குப் பதிலாக, 1989 இல் இருந்து கொழும்புப் பொலீஸாரால் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமது போராளி ஒருவரை விடுவிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரியிருக்கின்றனர்.

இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா இவ்வாறு தெரிவித்தார்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## 5 சவர்க்காரக் கட்டிகள் எடுத்துச் செல்ல அனுமதி?

### முகாமில் படையினர் ஒலிபரப்பு

கொழும்பு, ஆக. 17

வவுனியா - தாண்டிக்குளம் முகாம் வழியாக வடபகுதிக்கு ஒருவர் ஐந்து சவர்க்காரக் கட்டிகளை எடுத்துச் செல்லலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் தாண்டிக்குளம் முகாம் பகுதியில் கடந்த புதன்கிழமை ஒலிபரப்பி மூலம் அறிவிக்கப்பட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

பற்றறிகள் எடுத்துச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டால் அந்த நபர் எடுத்துச் செல்லும் ஏனைய பொருள்களும் பறிமுதல் செய்யப்படும் என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டதாம்.

இதேவேளை மண்ணெண்ணெய் வடக்கே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## அ. தி. மு. கவினர் கல்வீச்சு! அமைச்சர் சிதம்பரம் காயம்!!

### முதல்வர் ஜெயலலிதா மறுப்பு

சென்னை, ஆக. 17

இந்திய வர்த்தக இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் திருச்சி—புதுக்கோட்டை வழியாக காரில் சென்றுகொண்டிருந்த போது குண்டூரில் வைத்து அ.தி.மு.கவினர் கறுப்புக் கொடி காட்டினர்.

அமைச்சரின் காரைநோக்கி கற்கள், திராவகம் நிரப்பப்பட்ட முட்டைகள் போன்றவை வீசப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் திரு. சிதம்பரம், அவருடன் சென்றிருந்த திருச்சி எம். பி. திரு. அடைக்கலராஜ், புதுக்கோட்டை எம். பி. திரு. சுந்தரராஜ் ஆகிய மூவரும் சிறு காயங்களுக்கு இலக்காகினர் என்றும்—

அமைச்சரது காரும், அவருடன் சென்ற வேறு கார்களும், கண்ணாடிகள் நொருங்கி சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

இப்படியான சம்பவம் ஒன்றில் அ. தி. மு. கவினர் ஈடுபடவில்லை என்றும், இது குறித்து வெளியான ஏஜென்சிச் செய்திகள் தவறானவை என்றும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார். (ஒ-த)

## தெரிவுக்குழு முன் புலிகளும் யோசனை கூற அழைப்பு?

கொழும்பு, ஆக. 17

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நியமிக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் யோசனை வழங்கச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

எழுத்து மூலமாகவோ அல்லது நேரிலோ யோசனை வழங்குவதற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் அங்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## இரு சிப்பாய்கள் உயிரிழப்பு

கொழும்பு, ஆக. 17

மன்னார், கொக்குப்படையான் முகாம் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும்—

மட்டக்களப்பில் படையினரின் காவல் அரண்கள் மீது நடத்திய தாக்குதலில் மற்றொரு சிப்பாய் உயிரிழந்தார் என்றும் கொழும்பில் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ]

## ஹமில்டன் பதவிக்கு சிலர் குறி வைத்து இருந்தனராம்!

### அவரே இப்போது கூறுகிறார்

கொழும்பு, ஆக. 17

''நான் பதவியில் இருந்து ஓய்வுபெறலாம் என எதிர்பார்த்து எனது பதவிக்கு குறி வைத்து சிலர் காத்திருந்தனர்.''

தமது பதவிக்காலம் நீடிக்கப்பட்ட பின்னர் தம்மைச் சந்தித்த பத்திரிகையாளர்களிடம் மேற்கண்டவாறு கூறினாராம் இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க.

தனது பதவிக்காலம் நீடிக்கப்படமாட்டாது என்ற சாரப்பட சில பத்திரிகை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஆரையம்பதியில் தாக்கு! 2 ரெலோ உறுப்பினர் பலி!!

யாழ்ப்பாணம், ஆக. 17

மட்டக்களப்பு மாவட்டம், ஆரையம்பதியில் வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்த ரெலோ உறுப்பினர்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு ரெலோ உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இத்தாக்குதலில் ஆரையம்பதியைச் சேர்ந்த கோணேஸ், மகேந்திரன் ஆகியோரே பலியாகினர். [ஒ-3]

## இந்திய கடற்படை ஹெலி எங்கே?

பங்களூர், ஆக. 17

கர்நாடக மாநிலம், பங்களூரில் இருந்து நேற்று 3 பேருடன் புறப்பட்டுச் சென்ற இந்திய கடற்படை ஹெலிகொப்டர் காணாமல் போய் விட்டதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-த)

## இந்திய விமானம் நொறுங்கி 69 பேர் பலியாகினர்!

இந்தியன் எயர் லைன்ஸ் 737 போயிங் விமானம் ஒன்று நேற்று விழுந்து நொறுங்கியதில், அதில் பயணம் செய்த 69 பேரும் உயிரிழந்தனர் என்று அஞ்சப்படுகிறது.

விமானம் கல்கத்தாவில் இருந்து இம்பால் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது— தரையிறங்க சில நிமிடங்கள் இருந்தவேளையில்— இந்தக் கோர விபத்து நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒரு பச்சிளம் குழந்தை உட்பட 63 பயணிகளும், 6 விமான ஊழியர்களும் விமானத்தில் பயணம் செய்தனர். இவர்களில் ஒருவரும் உயிர் தப்பியதாக தகவல் இல்லை.

விமானம் சுக்கு நூறாக நொறுங்கிவிட்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும், அதனை கண்டு பிடிக்கும் முயற்சிகள் நேற்றிரவு வரை நடந்து கொண்டிருந்தன. (ஒ-த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அல்சேஷன் 2½ மாத நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூச்சி நீக்கப்பட்டவை. தொடர்பு: சி. ராஜேந்திரம், (பஜனை மாமா) C/o நியூ பார்மஸி, 5 ஆம் கட்டை, ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய். [4246]

தோட்டத்தில் பயிரிடுவதற்குரிய கீரை, வெண்டி கத்தரி, தக்காளி, மிளகாய் முதலிய விதைகள் ஏராளமாக உண்டு. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (17826)

### தேவை

உணவு பதனிடுவதில் அறிவும், அனுபவமும் உள்ள ஒருவர் தேவை. விளம்பரதாரர், இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரிக்கு தபால் மூலம் விண்ணப்பிக்கவும். (4243)

### மணமகள் தேவை

யாழ். இந்து குற்றமுள்ள 36 வயது, மாதம் 6,000/- சம்பளம் எடுக்கும் அரசாங்க உத்தியோகத்தருக்கு 27 — 31 வயதுக்கிடைப்பட்ட மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (17823)

### மணமகன் தேவை

யாழ். இந்து, 30 வயது அரசாங்க உத்தியோகப் பெண்ணுக்கு கனடாவை விரும்பும் B. Sc., T.A. எஞ்ஜினியர், எக்கவுண்டன் தேவை. உடனே Sponsor பண்ணி அனுப்பலாம். மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (17824)

### மணப்பெண் தேவை

யாழ். இந்து, 45 வயது Sales Representative க்கு உத்தியோக மணப்பெண்ணும், 30 வயது கொழும்புக் கம்பனியில் வேலை செய்பவருக்கும், 36 வயது T A க்கும், 34 வயது I C.M.A. க்கும், 33 வயது B. Sc. ஆசிரியருக்கும், குற்றமுள்ள 34 வயது டாக்டருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி யாழ்ப்பாணம். (17825)

### அம்பாள் திருமண சேவை

Engineers, Doctors, B.Sc. B A ஆகிய மணமக்களுக்கு பட்டதாரி மணப்பெண்கள் தேவை. விண்ணப்ப முற்பணம் 50/-. சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (17493)

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும்: பியூடோ. 39/17, மின்சார நிலைய வீதி. 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-0290)

### தவறிவிட்டது

S.K. சின்னத்தம்பி சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலி என்பவர் துவிச்சக்கர வண்டியில் 12 - 8 - 91இல் யாழ்ப்பாணம் நோக்கி வரும் வழியில் றெயில்வே கடவைக்கும் ஆஸ்பத்திரி பின் வீதிக்கும் இடையில் விபத்துக்குள்ளானதால், செவிப்புலன் கருவி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (17830)

---

## ஓராண்டு நினைவஞ்சலி





**யோசேப் வசந்தி**
மலர்வு: 04 — 09 — 1972

**யோசேப் மேரி மதிவதனி**
மலர்வு: 07 — 02 — 1977

மாதா பாதம்: 17 — 08 — 1990

இருமலராய் இணைந்து மணம் வீசி
என்றும் மடுமாதா பதம் போற்றி
இளமை என்ற பள்ளியில் இன்பமாய்
எல்லோரும் ஏற்ற உயர்ந்து நின்றீர்
கண்ணின் மணிகளெனக் காத்து நின்றோம்
காலனும் விளையாடக் காத்து நின்றான்
மின்னாமல் முழங்காமல் இடி இடித்து
வானத்து பொம்மரும் குண்டு போட்டான்
தேனக்க மொழி பேசும் - எம்
மானொத்த மேரி மதிவதனியும் - அவள்
உயிரெனவே வாழ்ந்த வசந்தியும் - அந்தோ
பாரினில் வாழ்வு போதும் என்றோ
மடுமாதா திருப்பதி தாள் பிடித்தீர்
பிள்ளைக் கனியமுதாம் தம்மைப் பிரிந்து
பெற்றோர் நாம் பேதலித்துப் புலம்பினாலும்
காணும் காட்சி உம் உருவாய்
காலம் எல்லாம் கண்டு நின்றிடுவோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணன்மார்,
உற்றார், உறவினர்கள்.

சிளாலி வீதி,
எழுதுமட்டுவாள். [17816]

---

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



வீர வேங்கை

## ● கப்டன் சிவா ●

[கணபதிப்பிள்ளை செல்லத்துரை]

தாயின் மடியில்: 21 - 02 - 1963
தாயக மண்ணிற்கு: 17 - 08 - 1989

''உலகம் திகைத்து நிற்க
உமது படை வெல்லும்
உமது தாகம் தீரும்''

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

குடும்பத்தினர்,
உறவினர்கள், நண்பர்கள்.

கிளாலி, எழுதுமட்டுவாள். [illegible]

---

## கண்ணீர் அஞ்சலி

**சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்**
16-8-1991 அன்று காலமானார்.

இவர் ஆனந்தா வீதி விளையாட்டுக்கழகத்தின் தலைவருமாவார். இவரின் மறைவுக்கு ஆனந்தா வீதி இளைஞர்களின் இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்.

(17498) மானிப்பாய் ஆனந்தா வீதி இளைஞர்கள்

---


## ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

ஆகஸ்ட் 31 ஆம் திகதி நடைபெறவிருக்கும் போட்டிப் பரீட்சைக்கான

### விசேட பயிற்சி வகுப்புகள்

★ தொடர்ந்து 10 தினங்கள்
★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்
★ அச்சடித்த பாடக்குறிப்புகள்

ஆரம்பம்: 18 - 8 - 1991 9 00 a.m.

★ அனுபவமிக்க ஆசிரியர்களின் இணைந்தசேவை
★ நாளாந்தக் கட்டணம் ரூபா 15 மட்டுமே

முன்னர் பயின்ற மாணவர்களுக்கு வகுப்புகள் வழமைபோல் நடைபெறுகின்றன

விவரங்களுக்கு:

**ASTAN INSTITUTE**

101/10, STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

(சி-0266)


---

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி தெய்வானைப்பிள்ளை சபாநாயகம்**

தோற்றம்: 6-1-1911
மறைவு: 21-8 1977

திதி: 17-8-1991

ஓயாது நாமிங்கு அம்மா! அம்மா!
என்று அழைத்தாலும்
வாராத இடத்துக்குச் சென்ற
எம் அருமை அம்மாவே!
பதினான்கு ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம்துயர் எந்நாளும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை. [17820]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரணக்கிரியை அழைப்பும்

தோற்றம்: 17 — 07 — 1927



மறைவு: 18 — 07 — 1991

**சின்னத்துரை இராமுப்பிள்ளை**
(சுப்பிரமணியம்)

17 - 08 - 1991 இன்று கோண்டாவிலில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். [17832]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தடையும் தண்டனையும்

யாழ்-கொழும்பு தரைப் பயணத்தில் மக்கள் படும் அவலங்களை யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

தமிழ்ப் பயணிகளின் பிரயாணக் கஷ்டங்களை நீக்குவதற்குத் தாம் நடவடிக்கை எடுப்பதாக பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் உறுதி அளித்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

கடந்த வருடம் ஜூன் மாதத்தில் வடக்கு-கிழக்கில் யுத்தம் ஆரம்பமான பின்னர்,வடபகுதி மக்கள் கொழும்பு சென்று வருவது என்பது பெரும் சோதனைகள், வேதனைகள், கஷ்டங்கள், அவலங்கள் சிரமங்கள் நிறைத்ததாக மாறியது.

இராணுவ நடவடிக்கைகள்- தாக்குதல்கள்- மோதல்கள் காரணமாகப் பிரயாணிகள் தங்கள் உயிரைப் பணயம் வைத்துத் தான் கொழும்புக்குப் பயணம் செய்து வருகிறார்கள். அது மட்டுமா? வவுனியா தடைமுகாமில் இராணுவத்தினரின் அளவுக்கு மீறிய துன்புறுத்தல்கள், கொடுமைகள், தொல்லைகள் என்பனவற்றைத் தாங்கிக் கொள்ளும், சகித்துக் கொள்ளும் உடல், உளத் தைரியமும் அவர்களுக்குத் தேவைப்படுகின்றது.

இவற்றுக்கு மேலதிகமாக, பிரயாணிகள், அவர்கள் வயதானவர்களாயினும் சரி, நோயாளராயினும் சரி, சிறுவர்களாயினும் சரி நொச்சிமோட்டையிலிருந்து தாண்டிக்குளம் வரை காட்டுப் பிரதேசம், வயல்வெளி, மேடு பள்ளம் என்று எட்டுமைல்களை நடந்து ஆக வேண்டும். இந்தப் பாதையை ஒருமுறை கடந்து கொழும்பு போய் வந்தவருக்கு அடுத்த முறை பயணம் அலுத்துப் போய்விடும்! பயணத்தின் போது முதியவர்கள் சிலர் மாரடைப்பால் மரணமானதும் உண்டு.

சுருக்கமாகச் சொல்வதானால் இந்தக் காட்டுப் பாதைப் பயணம் ஒரு மரணப் பொறி. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கோ, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கோ பயணம் செய்ய வேண்டாம் என்று அரசு — பாதுகாப்புப்படையினர்— விதித்துள்ள மறைமுகத் தடையாகும்! அது மட்டுமன்றி, உரிமைப் போராட்டம் நடத்துவதற்காக அரசாங்கம் தமிழர்களுக்கு விதித்திருக்கும் பலவித தண்டனைகளில் இதுவும் ஒன்றாகும்!

தான் ஒரு சோஷலிச சனநாயக நாடு என்று ஸ்ரீலங்கா தனக்குப் பெயர்ப்பட்டி அடித்து வைத்திருக்கிறது. மனித அடிப்படை உரிமைகளைப் பேணுவதாக சர்வதேச அரங்குகளில் பீற்றி வருகிறது. சனநாயகத்தின் அடிப்படைகளான எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம் என்பன தாராளமாக வழங்கப்பட்டிருப்பதாக வாய் நிறையப் பேசி வருகிறது.

ஆனால் தமிழ்ப் பயணிகள் தாம் நினைத்த இடத்துக்குப் போய் வரமுடியாமல் தடைகளும், தண்டனைகளும் விதித்திருக்கிறது! நோயாளர், வயோதிபர், குழந்தைகள் என்ற வேறுபாடில்லாமல் பயண உரிமையை மறுக்கிறது. உயிரைப் பணயம் வைத்துப் பயணம் செய்யுங்கள் என்று தண்டிக்கிறது.

உறுதி அளிக்கப்பட்டது போல அந்தத் தண்டனை நீக்கப்பட்டால் வேண்டாத வேதனை தீரும்.

### இடம் பெயர்ந்தோர் ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஆக. 17

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்தவர்களின் ஒன்று கூடல் நிகழ்ச்சி ஒன்று நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டம் மேல்மாடியில் நடைபெறும். (த)

### விசேட வகுப்பு

யாழ்ப்பாணம், ஆக. 17

1990, 1991 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆசிரிய தராதரப் பத்திர இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்குப் பயன்படும் முகமாக விசேட வகுப்புக்கள் நாளை மறுதினம் தொடக்கம் நடைபெறும்.

இவற்றில் சேர்ந்துகொள்ள விரும்புவர்கள் அன்று காலை 9 மணிக்கு கலாசாலைக்கு சமுகமளிக்கும்படி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் கேட்டுள்ளார். (ஒ)

### கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், ஆக. 17

டொனல்ட் கிண்ணத்துக்காக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டிகள் மீண்டும் இன்றுமுதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். [உ]

### இலங்கை வங்கியில் இன்று ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஆக. 17

ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக இன்று காலை 9 மணி முதல் 10 மணி வரை இலங்கை வங்கியின் சுன்னாகம், காங்கேசன்துறை ஊர்காவற்றுறை (ஸ்ரான்லி வீதி), மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், 2 ஆம் கிளை (ஸ்ரான்லி வீதி) ஆகிய கிளைகள் திறந்திருக்கும். யாழ். இலங்கை வங்கி மேற் தரக் கிளையில் காலை 9 மணி முதல் 11 மணி வரை ஓய்வூதியம் வழங்கப்படும். (ஒ)

### விசேட கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 17

முறைசாராக் கல்விப் பயின்ற மாணவர்களுக்கான விசேட கூட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கனகரத்தினம் ம. ம. வி., மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, மல்லாகம் ம. வி., இராமநாதன் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, நல்லூர் சி. சி. ரி. எம். எஸ்., வேம்படி மகளிர் கல்லூரி, கைதடி விக்னேஸ்வரா, இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலை, அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறும்.

யாழ். கல்வித் திணைக்கள முறைசாரப் பிரிவில் வேலணை ம. ம. வி. மாணவர்களுக்கான விசேட கூட்டம் நடைபெறும். (த)

### வறுமையால் தற்கொலை

தென்மராட்சி, ஆக. 17

திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் குடும்பத்துடன் தங்கியிருந்த வயோதிபர் ஒருவர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டார்.

சாவகச்சேரி கோவில்குடியிருப்பில் வசித்த ரீ. இராசலிங்கம் (வயது 63) என்ற குடும்பஸ்த்தரே மரணமானவராவார்.

இவர் வறுமையால் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது [உ-117]

### ஊர்காவற்றுறை மக்களுக்கு ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஆக. 17

ஊர்காவற்றுறை பகுதி மக்களுக்கான ஜூன் மாத ஓய்வூதியக் கொடுப்பனவு பணமாக நாளை மறுதினம் [திங்கள்] மண்கும்பானிலுள்ள ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கக் கிளையில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-125]

### கோரிக்கையில் மாற்றமில்லையாம்!

யாழ்ப்பாணம், ஆக. 17

வர்த்தக நிலையங்களைச் சனிக்கிழமைகளில் பி. ப. 2 மணியுடன் பூட்ட வேண்டும் என்ற கோரிக்கையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தினர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற பிரஸ்தாப சங்கத்தின் விசேட நிர்வாகசபைக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டதாகவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. [அ]

### எழுத்தாளர் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஆக. 17


அண்மையில் அமரரான ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவரான சி. வைத்திலிங்கத்தின் நினைவுப் பேருரை இன்று நிகழவுள்ளது.

நல்லூர் கம்பன் கோட்டத்தில் பி. ப. 3-30 மணிக்கு நடைபெறும் இந்நிகழ்ச்சியில் திரு. செம்பியன் செல்வன் நினைவுப் பேருரை ஆற்றுவார். கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமை வகிப்பார். (அ)

### வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 17

கட்டைக்காட்டுப் பகுதியில் நடந்த நேரடி மோதலில் கடந்த 18 ஆம் திகதி கோவிந்தன் [நடராசா சிதகுமார் - அல்வாய் மேற்கு] என்பவரும், கடந்த 28 ஆம் திகதி சுபராஜ் [செல்லத்துரை தேவன் - வேலணை] என்பவரும். புல்லா வெளியில் கடந்த 28 ஆம் திகதி நடந்த மோதலில் லெப்டினன்ட் தாசன் [அன்ரனிதாசன் தேவலிங்கம் - மயிலிட்டி] என்பவரும் வீரமரணமடைந்தனர். [ஒ-3]



## அடைக்கலம் தாரும் ஐயா!

உள்ளுறை வேலும் உந்தன்
உடனிரு மாதர் சீரும்,
தெள்ளுறு முழங்கு ளாறும்
திருவிழிக் கருணை நோக்கும்,
வெள்ளமாய் உள்ளத் துள்ளே
வேகமாய்ப் பாய்ந்து வந்து,
அள்ளுது நல்லூர்க் கந்தா!
அடைக்கலம் தாரும் ஐயா!

— முருகையா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தராசு அலுவலக தாக்குதல்: சென்னையில் 3 பேர் கைது!

சென்னை, ஆக. 17

'தராசு' வார இதழ் அலுவலகத்தின் மீது கடந்த புதன கிழமை இரவு நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக மூன்று பேரை சென்னைப் பொலீஸார் கைது செய்திருக்கின்றனர்.

இத்தாக்குதலை நடத்தியவர்கள் யார் என்பதைத் துப்புத்துலக்க விசேட பொலீஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலை நடத்தியவர்கள் பயன்படுத்திய தாகக் கூறப்படும் மூன்று ஓட்டோரிக்ஷோக்களை பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்கள்தான் தாக்குதலை நடத்தியிருக்க வேண்டும் என சந்தேகிக்க வேண்டி உள்ளது என்று 'தராசு' ஆசிரியர் ஷியாம் சொன்னார்.

இத்தாக்குதல் சம்பவத்தை அனைத்துக் கட்சிகளும் கண்டித்துள்ளன.

இதேவேளை—

தராசு அலுவலகம் உள்ள கட்டடத்தில்— இலங்கைப் பிரமுகரான திரு. சந்திரகாசனின் அலுவலகத்தில் காவல் கடமையில் இருந்த 4 பொலீஸார் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடந்த சமயம் சம்பந்தப்பட்ட பொலீஸார் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## பலாலியில் கடமையாற்றிய சிப்பாய்க்கு நடந்தது என்ன?

### விடுமுறையில் சென்றவர் பற்றி தகவல் இல்லை

கொழும்பு ஆக. 17

பலாலி இராணுவத் தளத்தில் பணிபுரிந்து வந்த கே. ஜி. ரஞ்சித் பத்மசேன என்ற விமானப்படை வீரர் தனது சொந்த ஊரான பொலனறுவைக்குச் சென்ற இடத்தில் அங்கு வைத்து காணாமற் போய்விட்டார் என அறிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தான் அவரைக் கடத்திச் சென்றிருக்க வேண்டும் என்று சந்தேகிப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

பலாலியில் இருந்து கடந்த ஞாயிறு விடுமுறையில் பத்மசேன பொலன்னறுவ சென்றார். மறுநாள் திங்கட்கிழமை பத்மசேன மோட்டார் சைக்கிளில் மட்டக்களப்பு - பொலன்னறுவ எல்லைப்புறக் கிராமமான சிங்கபுர ஊடாக சென்று கொண்டிருந்த போதே கடத்திச் செல்லப்பட்டார் என்றும் — அப்பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் உள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (இ-எ)

### தெரிவுக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கம் வகிக்கும் கட்சிகளுக்கே தெரிவுக் குழுவில் பிரதிநிதித்துவம் வழங்கப்படும். எனினும் அக்குழுவின் முன் யோசனை தெரிவிக்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் சந்தர்ப்பம் அளிக்க வாய்ப்பளிக்கப்படும்.

முக்கியமாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விரும்பினால் அதற்கு இவ் வசதியைச் செய்து கொடுக்க நாடாளுமன்ற வட்டாரங்கள் விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் விடுதலைப் புலிகள் தெரிவுக் குழு முன் சாட்சியமளிக்க முன்வருவார்களா என்பதில் சந்தேகம் உண்டு என்றும் அவ்வட்டாரங்கள் கருதுகின்றன. [அ-3]

### பிடிபட்ட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இத்தகவலை 'த ஐலண்ட்' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

இக்கைதி பரிமாற்றம் குறித்து விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் தெரிவித்திருப்பதாகவும் ஜெனரல் வனசிங்கா சொன்னார்.

விடுதலை செய்யக் கோரும் போராளி 1989 ஜூலையில் இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன் கொலை தொடர்பாக காவலில் வைக்கப்பட்டிருப்பவர் என்றும் —

இக்கைதிபரிமாற்றம் இடம் பெறுவதாயின் அதனை செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு மேற்பார்வை செய்ய வேண்டும் என விடுதலைப் புலிகள் கோரியிருக்கின்றனர் என்றும் தளபதி வனசிங்கா கூறினார்.

இராணுவ வட்டாரங்களின் படி, உபாலியின் குடும்பத்தினர் அரசுக்கு விடுத்த விண்ணப்பம் ஒன்றில் — உபாலியின் விடுதலைக்காக பேச்சு நடத்தும்படி கோரியுள்ளனர்.

இதுகுறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் அரசு தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன என்றும் 'த ஐலண்ட்' செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-எ)

### அவசரமாக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

போதிய நீர் வசதியில்லாததால் அங்கு சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு, உயிராபத்து நிலை உருவாகியுள்ளது. ஆகையினால் இம் முகாமில் உள்ள அகதிகளில் ஒரு பகுதியினரை வேறு இடத்தில் குடியேற்ற அனுமதி தருமாறு ஐ. நா. அகதிகள் அமைப்பு ஸ்ரீலங்கா அரசிடம் அனுமதி கேட்டதாகவும்—

ஆனால் ஸ்ரீலங்கா அரசு அனுமதி மறுத்திருப்பதாகவும தெரிவிககப்படுகிறது [உ-3]

### ஹமில்டன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களில் வெளிவந்த செய்திகளுக்கு இப்படியானவர்களின் தூண்டுதலே காரணமாக இருந்திருக்கலாம் என்றும் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார்

"அக்கறை உள்ள சிலருக்காக என்னைப் பதவியில் இருந்து ஓய்வுபெறச் செய்ய சில பத்திரிகைகள் முயற்சித்தன. எனது சேவை காலத்தில் ஆனையிறவு வெற்றி மிகப்பெரும் சாதனை, என்றும் அவர் கூறினார். [இ-எ-10]

### நிவாரண..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கும் சகலருக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

★ பொருளாதாரத் தடையை முழுமையாக நீக்க வேண்டும்.

★ ஏனைய இடங்களில் உள்ளது போன்று கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள் கிடைக்க வசதி செய்ய வேண்டும்.

— இந்த மகஜர் ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்டிருந்தது. [ஒ-8-15]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி முருகேசு சிவபாக்கியம்

காரைநகர் நெடுங்காட்டை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி முருகேசு சிவபாக்கியம் 11-8-91இல் காரைநகரில் காலமானார்.

இவர் முருகேசுவின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி (மலேசியா), இரத்தினேஸ்வரி (மலேசியா), இராசமலர், சிவனேஸ்வரி, சிவபாலன், நேசமலர் (சவுதி), யோகேஸ்வரி (உதயன் பணிமனை) ஆகியோரின் அன்புத் தாயாரும், நல்லையர் (மலேசியா), பாலசுப்பிரமணியம் (மலேசியா), ஜயாத்துரை, தனபாலன், கமலாதேவி ஆகியோரின் மாமியாரும், செல்வேந்திரன், செல்வராணி, பாலேந்திரன், பாலேஸ்வரி, இரத்தினமலர், பராசக்தி, கேமலதா, ஜெயரூபி, குகதர்சன், மேனகா, சோபிகா ஆகியோரின் பேத்தியும், தங்கம்மா (மலேசியா), காலஞ்சென்ற சுந்தரம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. — மு. யோகேஸ்வரி (மகள்)
C / 0367]

## லில்லி பரிபூரணம் நல்லதம்பி
(இளைப்பாறிய ஆசிரியை)

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த லில்லி பரிபூரணம் நல்லதம்பி 16 - 08 - 1991 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற டானியல் முருகேசு நல்லதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஞானசெல்வம், அருட்செல்வம், Paster குணசெல்வம், அரியராணி, நேசராணி, மகிழ்ராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், மலர், காலஞ்சென்ற ஜெயராசசிங்கம், சபாரெட்ணம், லில்லி, றதி ஆகியோரின் அன்பு மாமியாரும், கிறிஸ்ரி, றஞ்சினி, குமாரி, சாந்தி, ஜெயந்தி, சந்திரன், றொபினா, றோய், ஜோயல், யஸ்மின், ஸ்ரெலா, போல், றஜினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை 21, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள, எக்காளத்தொனி இல்லத்தில் இன்று (17 - 08 - 1991) சனிக்கிழமை 2 மணியளவில் நடைபெறும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ந. அருட்செல்வம் (மகன்)
(17829)

## முத்துக்கிருஷ்ணர் தம்பித்துரை

கரம்பனூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம்-அரசடி வீதியில் வசித்தவரும், முன்னை நாள் எகலியகொடை வர்த்தகருமாகிய முத்துக்கிருஷ்ணர் தம்பித்துரை காலமாகிவிட்டார்.
அன்னார் மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், பேரின்பமணி [இன்பம்], பத்மநாதன் [Canada], பாலச்சந்திரன் [U.S.A], பாலகிருஷ்ணன் [சாவகச்சேரி இந்துக் கல்லூரி], ராதா, ரூபா [Germany], சாந்தி [Canada] ஆகியோரின் அருமைத் தந்தையும், வாமதேவன் [ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்], மங்கையர்க்கரசி [Canada], சரஸ்வதி [யாழ். போதனா வைத்தியசாலை], ஜெயசோதி, ஜெகநாதன் [விவசாய ஆராய்ச்சி நிலையம், கிளிநொச்சி], ஓகஸ்ரின் [Germany], பவகரன் [Canada] ஆகியோரின் மாமனாரும், நந்திவர்மன், பிரதீபா, காஞ்சனா, அஜித்குமார், தர்சினி ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.
ஈமக்கிரியைகள் யாழ்ப்பாணம், அரசடி றோட், 125 ஆம் இலக்க இல்லத்தில் இன்று சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்:
125, அரசடி றோட், நீராவியடி, யாழ்ப்பாணம். — த. பாலகிருஷ்ணன்
(17833)

## திருமதி கனகம்மா செல்லத்துரை

வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திருமதி கனகம்மா செல்லத்துரை என்பவர் 16-8-91 அன்று காலமாகிவிட்டார். இவர் செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலம் சென்ற சந்தரம்பிள்ளை, திருநாவுக்கரசு[பொறியியலாளர், தொலைத்தொடர்பு திணைக்களம்,புறுணை],பூமணி[ஆசிரியை, வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்], சரோஜினிதேவி, கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும, திருமதி இ.சுந்தரம்பிள்ளை, திருமதி க. திருநாவுக்கரசு [புறுணை], திரு. வ. நல்லையா [அதிபர், வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்] திரு. க. தம்பிராஜா [வர்த்தகர்], திரு. வி. செல்வராஜா [இலங்கை வங்கி] ஆகியோரின் அன்பு மாமியாரும், கருணாகரன், கருணானந்தன், சுந்தரபவானி, பிருந்தி, திலீபன், சுதாகரன், பிரகேசன், சசிகலா, சசிகரன், சசிகேசவன், முகுந்தன், குமுதினி, சித்திராங்கனி, திறிவேணி, வாகீசன், சுகிர்தா, நிராஜினி, கோபிகா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னாரது பூதவுடல் இன்று [17-8-91] பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக வேலணை அம்பலவி மயானத்திற்கு எடுத்ச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வேலணை மேற்கு, வேலணை-6 — ந. சசிகரன்
[17499]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 2[illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சாரணர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 17
வடமாராணத்தில் உள்ள சாரணத் தலைவர்கள், குருளைச் சாரணத் தலைவிகள், திரிசாரணர்கள், சிரேஷ்ட சாரணர்கள் ஆகியோரை இன்று காலை 7 மணிக்கு பாலம் பொதுப்பணி மன்றத்தில் கூடுமாறு சாரண சேவை பொறுப்பாளர் கேட்டுள்ளார். (ஓ)

## அகதிகளுக்கு மாதம் ரூ. 20 கோடியாம்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அகதிகளை பராமரிப்பதற்காக மாதம் 20 கோடி ரூபாவை அரசு செலவழித்து வருவதாக பிரதமர் டி. பி. விஜேயதுங்கா தெரிவித்திருக்கிறார். (இ-எ)

## குண்டு வீச்சு!

ஆனையிறவுப் பகுதிகளிலும், இயக்கட்சி, மற்றும் பளையில் சவுக்குத்தோட்டம் ஆகிய இடங்களிலும் நேற்று முன் தினம் (வியாழன்) பொம்மர், அவ்ரோ குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.
இந்தப் பகுதிகளில் வெவ்வேறு நேரங்களில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.


## அனாதை இல்லம் வெற்றிடம்

நவாலி மகேஸ்வர இல்லத்தில் 8-12 வயதுடைய இந்து அநாதை ஆண் பிள்ளைகளுக்கு 10 வெற்றிடங்கள் உள்ளன. சேர்க்க விரும்புவோர் இல்லத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று 20-8-91 இற்கு முன் விணப்பிக்கவும்.

— முகாமையாளர்.
[4245]

குகன் இன்ஸ்ரிரியூட் ஆவரங்கால்.

## பெண் லிகிதர் தேவை

சமூகக்கல்வி / கணிதம் / ஆங்கிலம் ஆண்டு 6, 7 கற்பிக்கக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 18-8-91 ஞாயிறு பி. ப. 2-00 மணிக்கு நேரில் வரவும்.

— நிர்வாகி.
(17828)

*Personal*
## New Science Centre

**Elilakam Front Lane, Jaffna.**

18-8-91 ஆரம்பமாகும்
புதிய பகுதிகள்

CHE: செல்வா
★ Organic
★ Past Paper Class
PHY: சத்தியசீலன்
★ Electricity
★ Past Paper Class
ZOO: ஈஸ்வரதாசன்
★ சுவாசத்தொகுதி
★ பாகுபாடு
★ பிறப்புரிமையியல்
★ Past Paper Class
BOT: பாலா
★ Plant Anatomy
★ Past Paper Class
Pure/APP: குணசிங்கம்
★ [illegible]
★ உராய்வு
★ Past Paper Class
(C/0292)

# NEW SCIENCE ACADEMY
**JAFFNA.**

*PHYSICS*

திரு. S. கணேசன் B. Sc.

92 - Light - Mon., Wed. } 2.30— 4.00
Heat - Sat., Sun. } 9.00—10.00
91 - Properties of Matter
Mon. — 1.00—2 30

குறிப்பு:
திரு: நந்தகுமார் ஆசிரியரின் வகுப்புக்கள் யாவும் 19 - 08 - 1991 முதல் திரு. S. கணேசன் ஆசிரியர் அவர்களால் தொடர்ந்து கற்பிக்கப்படும்.

ஆரம்பம்: 19 - 08 - 1991
Mon. 1-00 p. m.
(சி-0357)

## நீராவியடி வண். வடகிழக்கு சனசமூக நிலைய நிதி உதவிக்காக

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் 14 07 1991இல் நடைபெறவிருந்த நிகழ்ச்சி
18 - 08 - 1991
பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும்.
இலங்கை வேந்தன் நடனக் குழுவினரின்
"கதகளி பரதநாட்டியம்"
புலவர் தட்சணாமூர்த்தியின் 100 ஆவது மேடையாக,
பண்டாரவன்னியன்
[சரித்திர நாடகம்]



இலங்கை வேந்தனின் தோற்றம்

அன்பளிப்பு: C. C. A.
வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்
[சி-0364]


# மரண அறிவித்தல்

## வேலும்மயிலும் விஜயநாதன்
[பொறியியலாளர்]

திரு. வேலும்மயிலும் விஜயநாதன் [பொறியியலாளர்] 13 - 8 - 91 அன்று கனடாவில் அகால மரணமானார். இவர் சியாமளாவின் [முன்னாள் ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி] அன்புக் கணவரும், திரு. திருமதி வேலும்மயிலும் [Organiser Insurance Corporation of Srilanka] ஆகியோரின் அன்பு மகனும், காலம் சென்ற திரு. வீ. சிவப்பிரகாசம் [Supdt. of Excise], திருமதி உ. சிவப்பிரகாசம் [ஓய்வு பெற்ற முன்னாள் ஆசிரியை] அவர்களின் அன்பு மருமகனும் ஆவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [17-8-91] கனடாவில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி.சிவரவீன் [மைத்துனர்]
[17497]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org